

பெண்கள் மற்றும் குழந்தைகள் நல ஆஸ்பத்திரியை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்த காட்சி. அருகில் கலெக்டர் ஆஷா ஆஜீத் மற்றும் பலர் உள்ளனர்.

### பள்ளத்தூரில் நமக்கு நாமே திட்டத்தில் கட்டப்பட்டது:

# ரூ.28½ லட்சத்தில் பெண்கள், குழந்தைகள் நல ஆஸ்பத்திரி

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார்

காரைக்குடி,ஆக.24-
பள்ளத்தூரில் நமக்கு நாமே திட்டத்தில் ரூ.28½ லட்சத்தில் கட்டப்பட்ட பெண்கள், குழந்தைகள் நல ஆஸ்பத்திரியை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் திறந்து வைத்தார்.

**அரசு ஆஸ்பத்திரி**

சிவகங்கை மாவட்டம் பள்ளத்தூர் முதல்நிலை பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அரசுடன் இணைந்து தனியார் பங்களிப்புடன் கட்டப்பட்ட அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மருத்துவமனை கட்டிடம் மற்றும் ஆய்வகத்தின் திறப்பு விழா நடைபெற்றது.

விழாவிற்கு மாவட்ட கலெக்டர் ஆஷா அஜீத் தலைமை தாங்கினார். பள்ளத்தூர் பேரூராட்சி தலைவர் சாந்தி சிவசங்கர் முன்னிலை வகித்தார். அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆஸ்பத்திரியை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். அப்போது அவர் கூறியதாவது:-

**தனியார் பங்களிப்பு**

பள்ளத்தூர் முதல்நிலை பேரூராட்சியில், நமக்கு நாமே திட்டத்தின் கீழ் அரசுடன் இணைந்து தனியார் பங்களிப்புடன் மொத்தம் ரூ.28½ லட்சத்தில் கட்டப்பட்ட அரசு பெண்கள் மற்றும் குழந்தைகள் நல ஆஸ்பத்திரி பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது. அதில் ஆய்வகம் மற்றும் உபகரணங்களுக்கு அரசின் பங்களிப்பு தொகையாக ரூ.6 லட்சம், பொதுமக்களின் பங்களிப்பாக ஏ.எம்.பி.எல். வள்ளியம்மை ஆச்சி சார்பில் ரூ.3 லட்சம், அதேபோல கட்டிடத்திற்கு அரசின் பங்களிப்பாக ரூ.11 லட்சம், அருண் சாரிட்டபிள் டிரஸ்ட் சார்பில் ரூ.6 லட்சம், மேலும் சாய்வுதளம், பேவர் பிளாக் கற்கள் பதித்தல், குழாய் இணைப்புகளுக்கு ஜவஹர் சார்பில் ரூ.1½ லட்சம், தோட்டம் மற்றும் தோட்டம் பராமரிப்பிற்கு நாச்சியப்பன் சார்பில் ரூ.1 லட்சம் நன்கொடையாக வழங்கப்பட்டு நவீன வசதிகளுடன் கூடிய ஆஸ்பத்திரி மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், தொழிலதிபர் பி.எல்.படிக்காசு, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இணை இயக்குனர் (பொ), பிரியதர்ஷினி, சாக்கோட்டை மேற்கு ஒன்றிய தி.மு.க. செயலாளர் கே.ஆர்.ஆனந்த், தி.மு.க. தலைமை பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்தூர் ரவி, நிதிப் பங்களிப்பு செய்தோரின் குடும்பத்தினர், பள்ளத்தூர் பேரூராட்சி துணைத்தலைவர் ருக்மணி, வார்டு உறுப்பினர் சோலைமலை, மருத்துவ நிலை அலுவலர் வள்ளியம்மை, பள்ளத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் பாலசுப்பிரமணியன் உள்பட துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.



### கடம்பூர்

# மக்களுடன் முத

திருவாடானை தாலுகா மங்
கிராமத்தில் தமிழக அரசின்
முதல்வர் திட்ட முகாம் நட
தலைவர் முகமது முக்தார்
வழங்கல் அலுவலர் இளங்
பேசினார். தாசில்தார்கள்
காப்பு திட்டம்) வட்டார வ
ஆகியோர் முன்னிலை வகித்
ஊராட்சி தலைவர் மாரிமு
முகாமில் பெறப்பட்ட கே
கணினியில் பதிவு செய்யப்ப
லர்களுக்கு அனுப்பி வைக்கப்
செயற்பொறியாளர் சித்தி
அலுவலர் புல்லாணி, துணை
வாய் ஆய்வாளர் செந்தில்,
மேகலா விஸ்வநாதன், மங்க
கார்த்திகேயன் ராஜா, அருண
மங்களக்குடி அப்துல் ஹக்
மாரிமுத்து, பழங்குளம் பார்
மாள் வருசைமுத்து, சிறுமன
துத்தாக்குடி ரசியா பானு, கட
பாப்பா ராமு, அரசத்தூர் மு
லர்கள் ஊராட்சி செயலாள
கள் உள்பட பலர் கலந்து
வட்டார வளர்ச்சி அலுவல



### கட்டுரை, பேச

# வெற்றி பெற்ற மாண

## கலெக்டர் வழங்கினார்

ராமநாதபுரம், ஆக.24
ராமநாதபுரம் மாவட்ட தமி
வளர்ச்சித்துறையின் சார்பி
தமிழ்நாடு நாள் விழாவை
முன்னிட்டு பள்ளி மாணவ
மாணவிகளுக்கு பேச்சு
போட்டி மற்றும் கட்டுரை
போட்டி நடத்தப்பட்ட
இதில் வெற்றி பெற்றவர்
ளுக்கு பரிசுத்தொகை மற்று
பாராட்டுச்சான்று வழங்கு
நிகழ்ச்சி கலெக்டர் சிம்ர
ஜீத் சிங் காலோன் தலைமை
யில் நடைபெற்றது. முதல்
இடங்கள் பெற்ற மாணவ
மாணவிகளுக்கு தலா ரூ.
ஆயிரம், ரூ.7 ஆயிரம், ரூ.5 ஆ
ரம் வீதம் பரிசுத்தொகை ம
றும் பாராட்டுச்சான்றிதை
கலெக்டர் வழங்கி பாராட்
னார்.
இந்நிகழ்ச்சியில் பேச்சு